திரு. கே. டி. கே. தங்கமணி : சில பொருள்களுக்கு வரிச்சலுகை அளித்தும் கூட எந்தவிதமான விலைக் குறைப்பும் அந்தப் பொருள் களைப்பொறுத்து இல்லை, ஆகவே, வரிச்சலுகையை எடுத்துவிட்டு, அந்தப் பொருள்களின் விலைகள் குறைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பதன் மூலம் பொருள்களின் விலையைக் கட்டுப் படுத்த பயன் ஏற்படும் என்றே செய்யப்பட்டிருக்கிறது. பொருள் களின் விலை உயர்வைப்பற்றிச் சொன்னார்கள். அதற்குத் தனி யாகக் கேள்வி போட்டால் உணவு அமைச்சர் பதில் சொல்வார்.

திரு. கே. என். குமாரசாமி : அமைச்சர் அவர்கள் பதில்சொல் கிறபோது எண்ணெய்க்கு 3 சதவீத வரி போட்டிருப்பதாகச் சொன் னார்கள். ஏற்கனவே, எண்ணெய்விலை லிட்டருக்கு 7 ரூபாய், 8 ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. 3 சதவீத வரி என்று வேறு போடுவதனால், விலை உயர்ந்து சாதாரண மக்கள் எண்ணெய் வாங்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே, அந்த 3 சதவீத வரியை ரத்து செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு தங்கமணி அவர்கள் கேள்வியே இந்தக் கேள்விக்குப் பதிலாகிவிடும். வரி விதிப்பினால் பொருள்களின் விலை உயர்கிறது என்று சொல்வதற் கில்லை. ஓரளவு விலையைக் கட்டுப்படுத்தத்தான் சில பொருள் களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

கருவேலங்குளம் ஆக்கிரமிப்பு

* 468 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், மஞ்சாநாய்க்கன்பட்டி கிராமத் திலுள்ள கருவேலங்குளத்தை தனியார் எவரேனும் ஆக்கிரமித்து உள்ளாரா ?

(இ) அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குக் கோரிக்கை ஏதேனும் பொது மக்களிடமிருந்து வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?

1973 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆக்கிரமிப்பைக் காலி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த ஆக்கிரமிப்பு நீண்ட காலமாக இருக்கிற காரணத்தினால், அங்கே குட்டை திட்டம் நிறைவேற்றப்பட தடையாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு மாவட்ட துணை அதிகாரி ஆணைகள் பிறப்பித்திருக்கிறார். குளித்தலை தாசில்தார் ஆக்கிரமிப்புச் செய்தவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்.

ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்தல்

* 469 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஊராட்சி ஒன்றியம் 62 ஊராட்சிகளைக் கொண்டதாக, 400 சதுர மைல் கொண்டிருக்கிறது. இதற்கு ஒதுக்கப்படுகிற தொகை கடலில் கரைத்த பெருங்காயமாக மாறிவிடுகிறது. ஆகவே, இதனை 2 ஆகப் பிரிக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: திரும்பத் திரும்பக் கேட்கப்படுகிற இதுபோன்ற கேள்விகளுக்கு நானும் இதே மன்றத்தில் 10 முறைகளுக்கு மேல் பதில் அளித்திருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களை 374 க்குமேல் பிரிக்கக்கூடாது என்கிற நிலைமை இருக்கிறது, மத்திய சர்க்கார் உதவி அளிக்கிற காரணத்தினால்.